**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**
**வேலூர் மாவட்டம்**
**கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண். 771/மாஒ1/CG/ஒபக/2024. நாள்: .06.2024**

பொருள் : பள்ளிக் கல்வி – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – வேலூர் மாவட்டம் – 2024–2025 ஆம் ஆண்டு அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உயர் கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கான ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி அளித்தல் – சார்பு.

பார்வை : தமிழ்நாடு, சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.1292/ஆ2/ நா.மு.8/ ஒபக/2024, நாள்.16.05.2024.

*********

பார்வையில் காணும் தமிழ்நாடு, சென்னை–6, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின்படி, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவருக்கும் உயர் கல்வி வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதற்காக நடப்புக் கல்வி ஆண்டில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடர்ச்சியாக, உயர்கல்வி வழிகாட்டி பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு மாவட்ட அளவில் ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான மாநில கருத்தாளர்களுக்கான பயிற்சி கடந்த 27.05.2024 மற்றும் 28.05.2024 ஆகிய இரண்டு நாட்களும், மாவட்ட அளவில் திட்டமிடல் கூட்டம் கடந்த 29.05.2024 அன்று மாவட்ட திட்ட அலுவலகத்தில் கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் தலைமையில் உதவி திட்ட அலுவலர் மற்றும் 4 மாநில கருத்தாளர்களுடன் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள உயர் கல்வி வழிகாட்டி ஆசிரியர்களுக்கான ஒரு நாள் புத்தாக்கப் பயிற்சி வரும் 10.06.2024 அன்று மாவட்ட ஆட்சியர் அவர்களின் தலைமையில் மாவட்டத் திட்ட அலுவலகத்தில் நடைபெற உள்ளது. எனவே இப்பயிற்சியில் ஒரு பள்ளியில் உள்ள 250 மாணவர்களுக்கு 1 உயர்கல்வி வழிகாட்டி ஆசிரியர் என்ற விகிதத்தில் கலந்து கொள்வதை சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உறுதி செய்திடல் வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ,
வேலூர் மாவட்டம்.

இணைப்பு: பள்ளி வாரியாக கலந்து கொள்ளவேண்டிய ஆசிரியர்களின் எண்ணிக்கை

பெறுநர்: அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள்.

நகல்:

1. ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர், சென்னை – 06 அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்ட ஆட்சியர், வேலூர் மாவட்டம் – அவர்களுக்கு தகவலுக்காக பணிவுடன் அனுப்பலாகிறது.
3. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.
4. மாவட்டக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்